# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

Issue 35 | July 2023 | Issue 7




மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் 2004 முதல் 2019 முடிய துணை ஆட்சியர் பட்டியல்களை திருத்தம் செய்து, 110 வட்டாட்சியர்களுக்கு பதவி உயர்வு அளித்தமைக்கு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களை விருதுநகரில் சந்தித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.



தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகளை சந்திக்க அழைத்ததன் பேரில் 28.07.2023 அன்று நண்பகல் 12:00 மணிக்கு அரசு தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ்மீனா இ.ஆ.ப., அவர்களை சந்தித்து வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.


தனிப்பிரதி விலை ரூ.10/-
*Per Copy Rs.10/-*

ஆண்டு சந்தா ரூ.120/-
*Annual Subscription Rs.120/-*



நமது தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60வது வைர விழா ஆண்டு அமைப்பு தினத்தை முன்னிட்டு சென்னை மாவட்ட நிர்வாகிகளுடன் இணைந்து தலைமையகக் கட்டடத்தில் மாநிலத் தலைவர் திரு.எம்.பி. முருகையன் தலைமையில் சங்கக் கொடி ஏற்றி அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.



தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் கடந்த 30.07.2023 அன்று நீலகிரி மாவட்டம் ஊதகமண்டலபத்தில் நடைபெற்ற போது நீலகிரி மாவட்ட நிர்வாகிகளுடனான குழு புகைப்படம் எடுத்த மகிழ்ச்சியான தருணம்



மதுரை மாவட்டத்தில் உள்ள வருவாய்த்துறை அலுவலர்களை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களும் தொடர்ந்து ஊழியர் விரோதப் போக்கை கடைபிடித்து வருவதால் அதனைக் கண்டித்து 18.07.2023 அன்று மாலை 5.45 மணிக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது

# அமைச்சர்கள் வாக்குறுதி காப்பாற்றப்பட வேண்டும்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சிவகங்கை மத்திய செயற்குழு கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வைர விழா ஆண்டு மாநாடு டிசம்பர் 2023ல் சென்னையில் மிக எழுச்சியாக நடைபெற உள்ளது. அதற்கு முன்பாக அனைத்து வட்டங்களிலும் வட்டக் கிளை மாநாடுகள், அதனைத் தொடர்ந்து மாவட்ட மாநாடுகளை நடத்தி தீர்மானங்களை இயற்றிட வேண்டும்.

நாம் மேற்கொண்ட தொடர் முயற்சியின் காரணமாக 3 ஆண்டுகளுக்கான துணை ஆட்சியர் பட்டியல் பதவி உயர்வு கருத்துருக்கள் அரசிற்கு அனுப்பப்பட்டு, விரைவில் பதவி உயர்வு ஆணைகள் வர உள்ளது. இதன் காரணமாக சமீபத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட துணை ஆட்சியர்களில் பலர் மீள துணை ஆட்சியர்களாக பதவி உயர்வு பெறுவர் என அரசு மட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் எஞ்சிய அலுவலர்களின் பதவி உயர்வினை பாதுகாத்திட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்துள்ள நிலையில், அதற்கான பணிகள் தொடர்கின்றன.

கடந்த மே, 2023ல் காத்திருப்பு போராட்டத்தைத் தொடர்ந்து அரசு மட்டத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து கோரிக்கைகளை மேலும் காலம் தாழ்த்தாமல் விரைவில் நிறைவேற்ற வேண்டும் என அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

தமிழக அரசால் சிறப்பு திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை" திட்டப் பணிகள் முழுமையாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களால் இரவு பகலாக மேற்கொண்டு வரும் நிலையில், இத்திட்டத்திற்கான போதிய கால அவகாசம், நிதி ஒதுக்கீடு மற்றும் சிறப்பு பணியிடங்கள் வழங்கப்படாதது பெரும் நெருக்கடியையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி உள்ளது. ஒவ்வொரு வட்டம் மற்றும் மாவட்ட அளவில் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க அரசால் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் அதற்கான ஆணைகள் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2021 சட்டமன்றத் தேர்தலில் வாக்குறுதியாக அளிக்கப்பட்ட "பங்களிப்பு ஓய்வூதியம் இரத்து" செய்திட கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஆக்கப்பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக இதனை நிறைவேற்ற வேண்டும் என்பது அனைத்து அரசு ஊழியர்- ஆசிரியர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இதற்கான நடவடிக்கைகளை ஜாக்டோ-ஜியோ முன்னெடுத்து வருகின்றது. சில மாதங்களுக்கு முன்பு மூன்று அமைச்சர்கள் வாக்குறுதி அளித்து போராட்டங்களை ஒத்தி வைத்ததைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்தி, கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசில் மாதாந்திர ஊதியம் பெறுவதே பெரும் சவாலான பணியாக உள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் தற்காலிக பணியிடங்களின் நீட்டிப்பு தொடர்பாக நிதித் துறையால் மூன்று இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. நிதித் துறையின் அரசு இணைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் வருவாய்த்துறை அரசு செயலாளர் ஆகியோரைக் கொண்ட குழுவில் பணியிடங்கள் நீட்டிப்புப் பெறுதலோடு, மாதாந்திர ஊதியம் ஆணைகள் பெறுவதே பெரும் சிக்கலானதாக உள்ளது. இதனைக் களைந்திடவும், இக்குழுவிலிருந்து வருவாய்த்துறைக்கு விலக்கு அளித்திடவும் சங்கத்தின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

வருவாய்த்துறையின் இயல்பாக பணிகளுடன், அரசால் செயலாக்கம் செய்திடும் சிறப்புத் திட்டங்கள், நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல், சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு, வாக்காளர் பட்டியல் திருத்தம், பேரிடர் மேலாண்மைப் பணிகள், முக்கியப் பிரமுகர் வருகை உள்ளிட்ட அதி முக்கியப் பணிகளை கால, நேரம் பார்க்காமல் மேற்கொண்டு வரும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் மற்றும் தனி ஊதியம் வழங்க வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. இதனை தற்போதைய அரசு பரிசீலனை செய்து விரைவில் ஏற்று ஆணையிட வேண்டும் என்பதே அனைவரும் எதிர்பார்ப்பாக உள்ளது. ■

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

*(அரசாணை எண்.2141, பொதுத் (பணி-அ) துறை, நாள் : 6.10.66ன்படி அங்கீகரிக்கப்பட்டது)*

## THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION

## *மாநில மையம்*

*க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

நாள்: 05.08.2023

# மத்திய செயற்குழு கூட்ட முடிவுகள் - சிவகங்கை

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழு கூட்டம் 05.08.2023 அன்று சிவகங்கை சன்ராக்ஸ் மஹாலில் சிறப்புற நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் கடந்த கால நடவடிக்கைகளை எடுத்துரைத்தார். மத்திய செயற்குழு கூட்டத்தின் முதல் நிகழ்வாக சங்கக் கொடியினை மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் ஏற்றி வைத்தார். சிவகங்கை மாவட்டத் தலைவர் திரு.வி.எஸ்.சேகர் வரவேற்புரை ஆற்றினார். அஞ்சலித் தீர்மானத்தை மாநிலத் துணைத் தலைவர் திரு.து.செந்தூர்ராஜன் முன்மொழிந்தார். இக்கூட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர் திரு.ஆர்.எஸ்.இராஜகோபால் மற்றும் மாநில செயலாளர் திரு.எஸ்.பார்த்திபன் ஆகியோர் அனுமதி பெற்று கலந்து கொள்ளவில்லை. இதர மாநில நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். இச்செயற்குழுக் கூட்டத்தில் இராணிப்பேட்டை மாவட்டம் நீங்கலாக, 37 மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கடந்த 08.04.2023 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற மத்திய செயற்குழுவிற்கு பின்பாக இயற்கை எய்திய தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.கேசவன், அலுவலக உதவியாளர் திரு.சுரேஷ்குமார், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த இளநிலை வருவாய் ஆய்வாளர் திரு.சங்கர்கணேஷ், மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த பதிவுறு எழுத்தர் திரு.ஐயப்பன், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.பஞ்சாட்சரம், அலுவலக உதவியாளர் திரு.சசிக்குமார், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த அலுவலக உதவியாளர் திரு.தமிழரசன், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த அலுவலக உதவியாளர் திரு.சிவராமன் மற்றும் மணிப்பூர் கலவரத்தில் உயிரிழந்தவர்களுக்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மத்திய செயற்குழு கூட்டத்தின் இடையே சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ப.மணிவண்ணன், மாவட்ட ஆட்சியர் திருமதி. ஏ.ஆஷா அஜித், இ.ஆ.ப., மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஆர்.பெரியகருப்பன் பி.காம்., பி.எல். ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தனது தலைமை உரையில், செயற்குழு கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டுள்ள சிவகங்கை மாவட்ட நிர்வாகிகளை பாராட்டினார். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பல ஆண்டு காலம் பல்வேறு பணி நிலைகளில் பணிபுரிந்து சங்கத்தில் மாவட்ட நிர்வாகிகளாக சிறப்புடன் செயலாற்றி வந்து, வட்டாட்சியர் நிலையிலிருந்து துணை ஆட்சியர்களாக பதவி உயர்வு பெற்றுள்ள முன்னாள் நிர்வாகிகள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக பதவி ஏற்றுள்ள மாவட்ட நிர்வாகிகள் ஆகியோருக்கு மாநில மையத்தின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

மேலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 10.05.2023 அன்று சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற தொடர் காத்திருப்புப் போராட்டத்தில் 38 மாவட்ட மையங்களின் சார்பில் சுமார் 2000-த்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் பங்கேற்றது அரசிடம் மிகப்பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது என்றும், போராட்டத்தின் விளைவாக மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இரவு 8.30 மணியளவில் போராட்டக் களத்திற்கே நேரடியாக வருகை தந்து நம்மிடம் பேச்சுவார்த்தை நடத்தியது முக்கியத்துவம் வாய்ந்ததாக தெரிவித்தார். மேலும் இதன் காரணமாக வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நமது கோரிக்கைகள் தொடர்பான பணிகள் வேகமாக நடைபெற்று வருவதாகவும், 2020-2022ஆம் ஆண்டு வரையிலான மூன்றாண்டு காலத்திற்குரிய துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியல்கள் ஒரு வார காலத்திற்குள் வெளியிடுவதாக உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்புரையின் அடிப்படையில் 2009ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை துணை ஆட்சியர் பட்டியல் திருத்தம் செய்து வெளியிடப்பட்டதால் தமிழகம் முழுவதும், 45 துணை ஆட்சியர்கள் வட்டாட்சியர்களாக பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள நிகழ்வு பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் மட்டுமின்றி ஒட்டுமொத்த வருவாய்த்துறை அலுவலர்களிடமும் மனவலியை ஏற்படுத்தியுள்ளது என்றும், எனவே பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள அனைவருக்கும் உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு மாநில மையம் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளும் எனவும் உறுதிபடத் தெரிவித்தார்.

மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், துணை வட்டாட்சியர் பதவி உயர்வு பட்டியல்கள் திருத்தத்தின் காரணமாக பதவி இறக்கம் பெறும் அலுவலர்களின் பணியினை பாதுகாத்திட மாநில மையத்தின் சார்பில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், மேலும் இதுகுறித்து மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.இரகுபதி, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமையில் கடந்த 16.05.2023 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உயர் அலுவலர்களுடனான பேச்சுவார்த்தையின்போது மாநில மையத்தின் சார்பில் வலுவாக கருத்துகள் எடுத்து வைக்கப்பட்டதன் அடிப்படையில் அரசு மட்டத்தில் நடவடிக்கை எடுத்து விரைவில் அரசாணை வெளியிடப்படவுள்ளது குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பின் காரணமாக எந்தவொரு அலுவலருக்கும் பாதிப்பில்லாத வகையில் நடவடிக்கை எடுத்திடுமாறு அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவதையும் நினைவு கூர்ந்தார். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் மற்றும் மசால்சி ஆகிய அடிப்படை பணியிடங்களை நிரப்பிட அரசு மட்டத்தில் இரண்டு கடிதங்கள் பெறப்பட்டும், இதுவரை வருவாய் நிர்வாக ஆணையரகத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும், எனவே இதில் விரைந்து அறிவிக்கை வெளியிடுமாறு வருவாய் நிர்வாக ஆணையரிடம் நேரிடையாக தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவது குறித்தும் எடுத்துரைத்தார்.

மாநில மையத்தின் தொடர் முயற்சியின் காரணமாக இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என பெயர் மாற்றம் செய்து 2016ஆம்ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு ஏழு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை விதித் திருத்தம் வெளியிடப்படாமல், தற்போது மேற்கண்ட இரண்டு பணியிடங்களையும், வேறு பணித் தொகுதிக்கு கொண்டு செல்லும் நிலை

குறித்த சாதக, பாதகங்களை ஆராய்ந்து கருத்து தெரிவித்திட மாநில மையத்தின் சார்பில் குழு அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவித்தார்.

தமிழகத்தில் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- உதவித்தொகை வழங்கிடும் பொருட்டு கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என்றொரு புதிய திட்டம் கடந்த 10.07.2023-ல் அரசாணை வெளியிடப்பட்டு முதற்கட்டமாக தகுதியான பயனாளிகளை தெரிவு செய்திடும் பணி முழுவதும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருவதால் வருவாய்த் துறையில் அலுவலர்கள் கடுமையான பணி நெருக்கடியில் பணிபுரிந்து வருகின்றனர் என்றும், எனவே இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட போதிய காலஅவகாசம், நிதி ஒதுக்கீடு மற்றும் வட்ட / மாவட்ட அளவில் புதிய பணியிடங்கள் ஆகியவற்றை வழங்கிடக் கோரி மாநில மையத்தின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம் விரிவான முறையீடு அளிக்கப்பட்டுள்ளது குறித்தும், மேலும் மாண்புமிகு சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் மற்றும் இத்திட்டத்திற்கான அரசு செயலாளர் திரு.தாரேஸ் அகமது இ.ஆ.ப, ஆகியோரிடம் தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது என்றும், எனவே இத்திட்டத்திற்கான புதிய பணியிடங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியவை விரைந்து பெறப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

பேரிடர் மேலாண்மைப் பிரிவில் செயல்பட்டு வந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்கள் ஆகியவை எவ்வித முன்னறிவிப்புமின்றி கடந்த 31.03.2023 பிற்பகல் முதல் கலைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளதால், வருவாய்த்துறை அலுவலர் மற்றும் பொது மக்களின் நன்மை கருதி, மேற்கண்ட பணியிடங்களை மீண்டும் தோற்றுவித்திடுமாறு மாநில மையத்தின் சார்பில் அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்பட்டதன் விளைவாக, இப்பணியிடங்களை மீண்டும் வழங்கிட கோப்பு தயார் செய்யப்பட்டு அரசின் தொடர் நடவடிக்கையில் உள்ளது என்றும் தெரிவித்தார்.

முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகிய நிலையில் மாவட்ட மாறுதல் கோரி வரப்பெறும் விண்ணப்பங்களின் மீது பரிசீலனை செய்து அனைவருக்கும் பணி மாறுதல் ஆணையினை விரைந்து வழங்கிட வருவாய் நிர்வாக ஆணையரகத்திடம் வலியுறுத்துவது, மேலும் நீதிமன்ற வழக்கு தொடர்பாக உயர்நீதிமன்றம் மற்றும் பல்வேறு மாவட்ட நீதிமன்றங்களுக்கு செல்லும் வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்துவரும் பிரச்சனைகள் மற்றும் அரசு வழக்குரைஞர்களின் செயல்பாடுகள் ஆகியவை குறித்து உள்துறை செயலாளர், அரசு தலைமை வழக்கறிஞர் மற்றும் உயர் நீதிமன்றப் பதிவாளரிடம் முறையீடு அளிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் இது குறித்து மாநில மையத்தின் சார்பில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்தார்.

திருச்சி மாவட்டம், துறையூரில் மணல் கடத்தலைத் தடுக்கச் சென்ற வருவாய் ஆய்வாளர் திரு.பிரபாகர் என்பவர் சில சமூக விரோதிகளால் தாக்கப்பட்டதற்கு நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி மாநில மையத்தின் சார்பில் அனைத்து மாவட்ட / வட்டத் தலைநகரில் சுமார் 10,000-க்கும் மேற்பட்ட வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்து கொண்ட ‘கண்டன ஆர்ப்பாட்டத்தினை” நடத்தியதன் விளைவாக இந்நிகழ்விற்கு காரணமான கயவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், இதற்கு காரணம் நமது அமைப்பின் வலிமை மற்றும் உறுப்பினர்களின் ஒற்றுமை ஆகியவைதான் எனவும் தெரிவித்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தற்போது பல்வேறு நிலைகளில் பணியிட பாதிப்பு அதிகமாக உள்ளதென்றும், இதனை சமாளித்திட அமைப்பை மேலும் வலிமைப்படுத்த வேண்டும் எனவும், பத்திற்கும் மேற்பட்ட பணி நிலையில் 14,000 உறுப்பினர்களை கொண்ட அமைப்பில் நாளது தேதிவரை 6500 உறுப்பினர்களுக்கான இணைப்புக் கட்டணம் மட்டுமே

செலுத்தப்பட்டுள்ளதாகவும், இதனை துரிதப்படுத்தி ஒரு உறுப்பினர்கூட விடுதலின்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிய இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா உள்ளிட்ட நிதி நிலுவைகளை ஆகியவற்றை இம்மாத இறுதிக்குள் செலுத்திட மாவட்ட மையங்கள் முன்வர வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

தற்போது எதிர் கொண்டுள்ள கோரிக்கைகளான துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தில் நிரந்தர தீர்வு, அலுவலக உதவியாளர் இரவுக் காவலர் மற்றும் மசால்சி பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்புவது, இளநிலை / முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித் திருத்த அரசாணை, மூன்று ஆண்டுகளுக்கான துணை ஆட்சியர் பட்டியல் மற்றும் பதவி உயர்வு, வாக்காளர் பட்டியல் சிறப்பு பணியிடங்கள், முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் ஒருங்கிணைந்த பணி முதுநிலை பட்டியல் தீர்வு, வருவாய்த்துறைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பிற துறை பணியிடங்களை பாதுகாத்தல் மற்றும் புதிய அலகுகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளில் விரைவில் தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை விரிவாக எடுத்துரைத்தார். மேலும், பொதுமக்களுக்கு சான்றிதழ்கள் வழங்குதல், இ-அலுவலகம் நடைமுறைபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணி நெருக்கடிகளுக்கு தீர்வு காணவேண்டிய அவசியம் குறித்தும், அரசின் நிலைபாடு குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

இறுதியில் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் பெறுதல் என்ற ஒற்றை கோரிக்கையுடன் எதிர்வரும் டிசம்பர், 2023-ல் சங்கத்தின் வைர விழா ஆண்டு மாநில மாநாட்டினை தலைநகர் சென்னையில் சிறப்பாக நடத்துவது, அதனையொட்டி 2023 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் வட்டக் கிளை மாநாடுகளையும், அதனைத் தொடர்ந்து 2023 அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மாவட்ட மாநாடுகளை நடத்திடுவது குறித்து திட்டமிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், இதற்கேற்றவாறு நமது அமைப்பின் செயல்பாடுகள் அமைந்திட வேண்டும் எனவும் தெரிவித்தார். சங்கத்தின் அமைப்பு விதிகள் கால மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் விரிவாக பரிசீலனை செய்து மாற்றங்கள் பரிந்துரைத்திட குழு ஏற்படுத்த அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார்.

மத்திய செயற்குழு கூட்டத்தை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மாநில செயலாளர் திரு. ஆ.தமிழரசன், சிவகங்கை மாவட்டத் தலைவர் திரு. வி.எஸ். சேகர், மாவட்டச் செயலாளர் திரு. ரா. கிருஷ்ணகுமார் மற்றும் மாவட்டப் பொருளாளர் திரு.ஜி.நாகநாதன் உள்ளிட்ட அனைத்து மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களையும் வெகுவாக பாராட்டினார்.

பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் கடந்த 08.04.2023-ல் நடைபெற்ற தூத்துக்குடி மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்பாக எடுக்கப்பட்ட கடந்த கால நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ததோடு விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக கடந்த 27.04.2023, 03.06.2023, மற்றும் 30.07.2023 ஆகிய தினங்களில் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் வருவாய்த் துறை அலுவலர்களின் நலன் சார்ந்த கோரிக்கைகள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் இயற்றப்பட்டு உயர் அலுவலர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது குறித்தும், மேலும் கடந்த மூன்று மாதங்களில் தொடர்ச்சியாக 5 முறை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து பதவி இறக்கம், பணிப் பாதுகாப்பு அரசாணை வழங்குதல், நான்கு ஆண்டு துணை ஆட்சியர் பட்டியலை வெளியிடுவது, அலுவலக உதவியாளர் காலிப் பணியிடங்களை நிரப்புதல் மற்றும் முதுநிலை / இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித் திருத்த அரசாணை வெளியிடுதல் உள்ளிட்ட வருவாய்துறை அலுவலர்களின் வாழ்வாதாரம் சார்ந்த கோரிக்கைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டதன் காரணமாக 110 வட்டாட்சியர்களுக்கு துணை ஆட்சியர் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை விரைந்து நிறைவேற்றிட வலியுறுத்தி மாநில மையத்தின் சார்பில் கடந்த 10.05.2023 அன்று சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற தொடர் காத்திருப்பு போராட்டத்தில் 38 மாவட்ட மையங்களின் சார்பில் சுமார் 2000-த்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் பங்கேற்றது அரசிடம் மிகப்பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது என்றும், போராட்டத்தின் விளைவாக மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் இரவு 8.30 மணியளவில் போராட்டக் களத்திற்கே நேரடியாக வருகை தந்து நம்மிடம் பேச்சுவார்த்தை நடத்தியது வேறு எந்த துறைவாரி சங்கத்திலும் இதுவரை கண்டிராத நிகழ்வு என்றும் தெரிவித்தார்.

மேற்கண்ட போராட்டத்தின் போது அளிக்கப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.இரகுபதி, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமையில் உயர் அலுவலர்களுடன் கடந்த 16.05.2023 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் வருவாய்த் துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைள் குறித்து நமது மாநில நிர்வாகிகள் சுமார் 1.00 மணி நேரம் விரிவாக பேச்சுவார்த்தை நடத்தினர் என்றும், இதன் விளைவாக முதற்கட்டமாக 2019-ம் ஆண்டு வரை துணை ஆட்சியர் பட்டியல் திருத்தம் செய்யப்பட்டு 110 வட்டாட்சியர்களுக்கு துணை ஆட்சியர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும் நிலுவையிலுள்ள மூன்றாண்டிற்கான துணை ஆட்சியர் பட்டியல் வெளியிடுதல், பட்டதாரி அல்லாத அலுவலர்களின் பணியிறக்க பாதிப்புகளை சரிசெய்து அரசாணை வெளியிடுதல் உள்ளிட்ட இதர கோரிக்கைகளின் மீது அரசு மட்டத்தில் விரைந்து பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், ஒரு வார காலத்திற்குள் இப்பணிகளை நிறைவு செய்து அரசாணை வெளியிட வாய்ப்புள்ளது என்பது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் அலுவலக உதவியாளர் முதல் வட்டாட்சியர் வரை 14,000 உறுப்பினர்களைக் கொண்ட சாதி, மத பேதமற்ற அமைப்பு என்றும், இத்தகைய உறுதிப்பாட்டுடன் மாநில மையம் தொடர்ந்து செயல்பட்டு வருவதன் காரணமாக கடந்த 60 ஆண்டுகளாக எவ்வித தொய்வுமின்றி மிக வலிமையான துறைவாரி சங்கமாக இயங்கி வருகிறது என்றும், எனவே அமைப்பினை மேலும் வலிமைப்படுத்திடும் விதமாக மாவட்ட மையங்கள் தொடர்ந்து தொய்வின்றி செயல்படவேண்டியதன் அவசியம் குறித்தும், உறுப்பினர்களின் நலன் காத்திடும் பொருட்டு தொடர்ந்து இயக்கப் பணிகள் மேற்கொள்ள வேண்டுமென்றும், இதற்கு ஏற்றாற்போல் மாவட்ட நிர்வாகிகளின் செயல்பாடுகள் அமைந்திட வேண்டுமெனவும் எடுத்துரைத்தார்.

மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்ப்புரையின் அடிப்படையில் துணை ஆட்சியர் பட்டியல் திருத்தம் செய்யப்பட்டதால் 45 துணை ஆட்சியர்கள் வட்டாட்சியர்களாக பணியிறக்கம் செய்யப்பட்டது குறித்து மாநில மையம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்றும், பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்களின் மனவலியை உணர்ந்தே மாநில மையத்தின் சார்பில் இவர்களுக்கு உடனடியாக பதவி உயர்வு வழங்கிட வலியுறுத்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு முறையீடு அளிக்கப்பட்டது என்றும், மேலும் இதே கோரிக்கைக்காக கடந்த 27.07.2023 அன்று தமிழக தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா இ.ஆ.ப., அவர்களை சந்தித்து முறையீடு அளித்து விரிவாக பேசப்பட்டதாகவும், மேலும் மாநில மையம் ஒரு சாராருக்கு ஆதரவாக ஒருபோதும் செயல்பட்டதில்லை என்றும் உறுதிபட தெரிவித்தார்.

மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் மூன்று விதமான தீர்ப்புரைகளின் அடிப்படையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் துணை ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் ஆகிய நிலைகளில் கடந்த 2004ஆம் ஆண்டிலிருந்து பட்டியல் திருத்தம்

செய்யப்படுவதால் பல்வேறு நிலையிலான அலுவலர்கள் பணியிறக்கம் உள்ளிட்ட கடுமையான பாதிப்புகளை சந்தித்து வருகின்றனர். இதனால் சங்கம் சவாலான காலகட்டத்தில் பயணிப்பதாகவும், தனி நபர்கள் நீதிமன்றங்களில் வழக்கு தொடுப்பதை சங்கம் ஒருபோதும் ஆதரிப்பதில்லை என்றும், பாதிக்கப்பட்ட அலுவலர்களுக்கு நிவாரணம் பெற்று வழங்கிடும் நோக்கத்துடனேயே மாநில மையம் தொடர்ந்து இயங்கி வருகிறது என்றும், வருவாய்த் துறையில் எந்தவொரு நிலையிலான அலுவலருக்கும் பாதிப்பு ஏற்படாமல் காத்திட மாநில மையம் தொடர்ந்து போராடும் என்றும் தெரிவித்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பணிகள் முழுவதும் தற்போது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இத்திட்டத்தினை செயல்படுத்த போதிய காலஅவகாசம், நிதி ஒதுக்கீடு மற்றும் கூடுதல் பணியிடங்கள் வழங்கப்படாமல் இத்திட்டப் பணிகளை அவசர கதியில் முடித்திட அழுத்தம் கொடுக்கப்படுவதால் வட்டாட்சியர் முதல் அனைத்து நிலையிலான வருவாய்த்துறை அலவலர்களும் அதீத பணி நெருக்கடியுடன் பணிபுரிந்து வருகின்றனர் என்றும், எனவே இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட ஏதுவாக முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கப்பட்டபோது துணை ஆட்சியர் நிலையில் கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தியது போன்று மாவட்ட, வட்ட அளவில் உடனடியாக புதிய பணியிடங்கள், நிதி ஒதுக்கீடு மற்றும் திட்டத்தினை செயல்படுத்திட உரிய கால அவகாசம் ஆகியவற்றை வழங்கிடுமாறு வலியுறுத்தி தமிழக தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா இ.ஆ.ப., அவர்களை சந்தித்து மாநில மையத்தின் சார்பில் முறையீடு அளித்து பேசப்பட்டுள்ளது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மாவட்ட நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்திடும் விதமாக மாநில மையத்தின் சார்பில் 8 மண்டல பயிலரங்கம் நடத்திட திட்டமிடப்பட்டு முதற்கட்டமாக திருவள்ளூர், கடலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று இடங்களில் 14 மாவட்டங்களைச் சார்ந்த நிர்வாகிகளுக்கு முன்னாள், இந்நாள் மாநில நிர்வாகிகள் மூலம் சிறப்பான முறையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும், இப்பயிற்சியினால் நமது ஸ்தாபனம் இதுவரை கடந்து வந்த பாதை மற்றும் இயக்க நடவடிக்கைகள் மூலம் நாம் சாதித்துள்ளவை குறித்து நிர்வாகிகள் அறிந்து கொள்ள வழிவகை ஏற்பட்டுள்ளது என்றும், எனவே மீதமுள்ள 5 மண்டலங்களிலும் மாநில மையத்தின் சார்பில் தொடர்ந்து பயிலரங்கம் நடத்தி முடிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைர விழா மாநில மாநாட்டினை எதிர்வரும் டிசம்பர் 2023 முதல் வாரத்தில் சென்னையில் நடத்திட வேண்டியதன் அவசியம் குறித்தும், இதனையொட்டி ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் வட்ட மாநாடுகளையும், அக்டோபர், நவம்பர் மாதங்களில் மாவட்ட மாநாடுகளை நடத்திடுவது தொடர்பாகவும் மாநில மையத்தின் சார்பில் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்காள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் அவர்கள் கடந்த 08.04.2023-ல் தூத்துக்குடியில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டம் வரை வரப்பெற்ற 2023ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் சந்தா, சங்கக்குரல் சந்தா, கட்டட நிதி, TNGEA மாநாட்டு நிதி நிலுவை, சேலம் மாநாட்டு நிதி நிலுவை, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி நிதி நிலுவை மற்றும் 2023-ம் ஆண்டிற்கான நாட்குறிப்பு நிதி நிலுவை உள்ளிட்ட அனைத்து நிலுவை இனங்கள் குறித்த மாவட்ட வாரியான அறிக்கையினை செயற்குழுவில் தாக்கல் செய்தார்.

இச்சிறப்பு வாய்ந்த மத்திய செயற்குழுக்கூட்டத்தில் சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் நிர்வாகிகளுக்கு மாவட்ட மையத்தின் சார்பில் சால்வை அணிவித்தும், நினைவு பரிசு வழங்கியும் கௌரவிக்கப்பட்டது.

இம்மத்திய செயற்குழுவில் இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கவில்லை. இதர 37 மாவட்டங்களின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள், நிருவாகிகளின் செழுமையான கருத்துக்கள், ஆக்கபூர்வமான விவாதங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக இயற்றப்பட்டன.

**தீர்மானம் - 01**

மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், 2004ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு முடிய துணை ஆட்சியர்கள் பட்டியல் திருத்தம் செய்யப்பட்டு, அதன் விளைவாக 110 வட்டாட்சியர்களுக்கு துணை ஆட்சியர் பதவி உயர்வு வழங்கிய தமிழக அரசுக்கு இச்செயற்குழு தனது நெஞ்சார்ந்த நன்றியை பதிவு செய்கிறது.

**தீர்மானம் - 02**

மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தில் பணியிறக்கத்தைத் தவிர்க்க பதவி உயர்வு பாதுகாப்பு அரசாணை வெளியிடுதல், 2020 - 2022 வரையிலான மூன்றாண்டு காலத்திற்குரிய துணை ஆட்சியர் பட்டியலை உடன் வெளியிடுதல், இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித் திருத்த அரசாணை வெளியிடுதல், பேரிடர் மேலாண்மைப் பிரிவில் கலைக்கப்பட்ட முதுநிலை வருவாய் ஆய்வாளர், அலுவலக உதவியாளர் பணியிடங்களை மீண்டும் தோற்றுவித்தல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் பணிப்பளுவினை கருத்தில் கொண்டு அனைத்து நிலை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் மற்றும் தனி ஊதியம் வழங்கிடக் கோருதல், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் மற்றும் மசால்சி உள்ளிட்ட அடிப்படை பணியிடங்களை உடன் நிரப்புதல் மேலும் 16.08.2022, 01.11.2022, 10.05.2023 மற்றும் 16.05.2023 ஆகிய தினங்களில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக்குழு பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்றிட மேலும் ஒரு மாதம் கால அவகாசம் வழங்கிடுவதுதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 03**

மாண்பமை உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் துணை வட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் பட்டியல் திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாக 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்த வட்டாட்சியர்கள் முதுநிலை வருவாய் ஆய்வாளர்களாக பதவி இறக்கம் பெறும் அவல நிலை குறித்து கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து முறையீடு அளிக்கப்பட்டும், கடந்த 16.05.2023 அன்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர், சட்டத்துறை அமைச்சர், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சுமூக உடன்படிக்கை எட்டப்பட்டும் இதுவரை ஆணை வழங்கப்படாமல் காலதாமதம் செய்யப்படும் நிகழ்வு பணியிறக்கம் பெறும் அலுவலர்களிடம் மட்டுமின்றி வருவாய்த்துறை அலுவலர்கள் அனைவரிடமும் மிகுந்த மனவலியை ஏற்படுத்தியுள்ளது. இதில் பாதிப்படைந்த அலுவலர்கள் உடல்நலம், மனநலம் பாதித்து உயிரிழந்துள்ளதைக் கருத்தில் கொண்டு பதவியிறக்க பாதிப்புகளை சரிசெய்திட பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தீர்வின்படியான ஆணையினை உடனடியாக வெளியிட உரிய நடவடிக்கை எடுத்திடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 04**

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பணிகள் முழுவதும் தற்போது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இத்திட்டத்தினை

செயல்படுத்த போதிய காலஅவகாசம், நிதி ஒதுக்கீடு மற்றும் கூடுதல் பணியிடங்கள் வழங்கப்படாமல் அவசர கதியில் இத்திட்டப் பணிகளை முடித்திட அழுத்தம் கொடுக்கப்படுவதால் வட்டாட்சியர் முதல் அனைத்து நிலையிலான வருவாய்த்துறை அலவலர்களும் அதீத பணி நெருக்கடியுடன் பணிபுரிந்து வருகின்றனர். இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட ஏதுவாக முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கப்பட்டபோது துணை ஆட்சியர் உள்ளிட்ட கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு மேற்படி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. எனவே இதனை முன்மாதிரியாகக் கொண்டு மாவட்ட, வட்ட அளவில் உடனடியாக புதிய பணியிடங்கள் ஏற்படுத்திடவும், நிதி ஒதுக்கீடு மற்றும் திட்டத்தினை செயல்படுத்திட உரிய கால அவகாசம் ஆகியவற்றை வழங்கிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 05**

மாண்பமை உச்ச நீதிமன்ற தீர்ப்புரையின் அடிப்படையில் 2004 முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான துணை ஆட்சியர் பட்டியல்கள் திருத்தம் செய்யப்பட்டு தமிழகம் முழுவதும் துணை ஆட்சியர் நிலையில் பல ஆண்டுகள் பணியினை நிறைவு செய்த அலுவலர்கள் உள்ளிட்ட 45 துணை ஆட்சியர்கள் வட்டாட்சியர்களாக பணியிறக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்நிகழ்வு பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் மட்டுமின்றி அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களிடையேயும் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது. எனவே பணியிறக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்களின் பணி அனுபவம் மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் அனைவருக்கும் உரிய தீர்வினை உடனடியாக வழங்கிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 06**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் பெரும் முயற்சியின் காரணமாக இளநிலை உதவியாளர், உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என பெயர் மாற்றம் செய்து 2016ஆம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு ஏழு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் தொடர்பில்லாத பல்வேறு காரணங்களை தெரிவித்து இக்கோப்பு தலைமைச் செயலகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக நிலுவையாக உள்ளது. மேலும், கடந்த 16.05.2023 அன்று நடைபெற்ற அரசுடனான பேச்சுவார்த்தையில் இக்கோரிக்கை ஏற்கப்பட்டும், இதில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. விதித்திருத்த ஆணை வெளியிடப்படாததால் மேற்கண்ட அரசாணை இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது. எனவே இதில் மேலும் காலம் தாழ்த்தாது உரிய விதித் திருத்தத்தினை உடனடியாக வெளியிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 07**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் காலியாகவுள்ள மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் மற்றும் மசால்சி ஆகிய அடிப்படை பணியிடங்களை நிரப்பிட அனுமதித்து கடந்த 19.02.2021 மற்றும் 25.11.2022 ஆகிய தேதிகளில் அரசிடமிருந்து கடிதம் பெறப்பட்டும் இதுவரை மேற்கண்ட பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. எனவே இவ்வினத்தில் காலதாமதம் செய்வதைத் தவிர்த்து அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உடனடியாக உரிய சுற்றறிக்கை அனுப்பி மூன்றாண்டுகளுக்கு உட்பட்ட பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களை வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 08**

பேரிடர் காலங்களில் மக்களின் உயிரை காக்கக்கூடிய பல்வேறு பணிகளை இரவு பகல் பாராமலும், கண் துஞ்சாமலும், 24-மணி நேரமும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். ஏற்கனவே பல்வேறு பணிச்சுமையுடன் அலுவலர்கள் பணிபுரிந்து வரும் சூழலில் இதனை மேலும் கடுமையாக்கும் விதமாக பேரிடர் மேலாண்மைப் பிரிவில் செயல்பட்டுவந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களை 31.03.2023 முதல் கலைத்து ஆணையிடப்பட்டுள்ளதை ரத்து செய்து, கலைக்கப்பட்ட 97 பணியிடங்களையும் மீண்டும் உருவாக்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 09**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் இயற்கை சீற்றம், சட்டம்-ஒழுங்கு பராமரித்தல், முக்கிய பிரமுகர்கள் வருகை, பல்வேறு வகையிலான நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்குதல் மற்றும் சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல் பணிகள் உள்ளிட்ட அதிமுக்கியமான பணிகளை இரவு, பகல் பாராது விடுமுறை தினங்களில்கூட தொடர்ந்து 24 மணி நேரமும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே இவர்களின் பணிப்பளு மற்றும் பணித் தன்மையினை கருத்தில் கொண்டு அனைத்து நிலை வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் மற்றும் தனி ஊதியம் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 10**

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணிக்கு ஆறு சட்டமன்ற தொகுதிகள் கொண்ட மாவட்டங்களில் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடங்கள் ஏற்படுத்துதல் மற்றும் கடந்த 20 ஆண்டுகளாக வருவாய்த்துறையில் தேர்தல் பிரிவில் பணியாற்றி வந்த தற்காலிக இளநிலை உதவியாளர்களின் வயது மூப்பு மற்றும் அவர்களின் பணி அனுபவத்தினையும், கருத்தில் கொள்ளாமல் திடீரென அவர்களை பணியறவு (Retrenched from Service) செய்துள்ளதை ரத்து செய்து அவர்களின் நீண்டகால பணிக்காலத்தையும், வாழ்வாதார நிலையினையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மீண்டும் பணியிடம் வழங்கிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 11**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பல்வேறு சான்றிதழ்கள் கோரி மிகுதியான அளவில் மனுக்கள் வருவதால் அவற்றினை முடிவு செய்வதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் சான்றிதழ் பெறுவதில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். எனவே பெருகிவரும் மக்கள் தொகையின் அடிப்படையில் இதனை விரிவாக பரிசீலனை செய்து நிர்வாக நலன் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி முதல்வரின் முகவரி மற்றும் சான்றிதழ் வழங்கும் பணிக்கென வட்டத்திற்கு ஒரு துணை வட்டாட்சியர் பணியிடங்களை நிரந்தரமாக உருவாக்கிட தமிழக அரசினை வலியுறுத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

**தீர்மானம் - 12**

கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை எண் 02/ 2018, பணி 3 (1) /3677/2018, நாள்: 14.10.2018-ன்படி தமிழ்நாடு குடிமைப்பணிகள் விதி 1973 பிரிவு 17 (ஆ)வின் கீழ் கடுமையான குற்றச்சாட்டுகள் நிலுவையில் உள்ள வருவாய்த்துறை அலுவலர்களை கூர்நோக்குள்ள பணியிடங்களில் (Sensitive Post) நியமனம் செய்திடக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இச்சுற்றறிக்கையில் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடத்தையும் கூர்நோக்குள்ள பணியிடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் குற்றச்சாட்டு

நிலுவையில் உள்ள அலுவலர்களுக்கு இச்சுற்றறிக்கையினை சுட்டிக்காட்டி குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பயிற்சி வழங்கப்படாமல் உள்ளது. குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பயிற்சி என்பது துணை வட்டாட்சியர் பதவி உயர்வில் செல்வதற்கான கட்டாய பயிற்சியாகும், மேலும் இரண்டாண்டு குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பயிற்சியினை நிறைவு செய்த பின்னரே முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையிலிருந்து துணை வட்டாட்சியர் பதவி உயர்வு அளித்திட இயலும் என்பதால், மேற்கண்ட சுற்றறிக்கையிலிருந்து குறுவட்ட வருவாய் ஆய்வாளர் பணியிடத்தினை நீக்கி திருத்திய சுற்றறிக்கை வெளியிடுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையரை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 13**

ஒருங்கிணைந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் முதுநிலை நிர்ணயித்தல் தொடர்பாக தேனி, மதுரை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்களை நேரடி விசாரணை மேற்கொண்டு, வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு ஓராண்டு கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை ஆணைகள் ஏதும் பிறப்பிக்கப்படாமல் கோப்பு அரசிடம் நிலுவையில் உள்ளது. எனவே இதில் மேற்கொண்டு காலம் தாழ்த்தாமல் வருவாய் நிர்வாக ஆணையரால் அனுப்பப்பட்டுள்ள பரிந்துரையின் மீது நிரந்தர தீர்வினை உடன் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 14**

புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில் கடந்த 04.04.2012 அன்று முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. மிகுதியானஅளவில் காலிப் பணியிடம் இருந்தும், உரிய காலத்தில் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. இதனால் பட்டியலில் இடம் பெற்றிருந்த அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை சரிசெய்திடக் கோரி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட முன்மொழிவு அரசிடம் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளது. எனவே பாதிக்கப்பட்டுள்ள அலுவலர்களிடம் நேரிடையாக விசாரணை செய்து அதனடிப்படையில் ஒரு மாத காலத்திற்குள் ஆணைகள் வழங்கிடுமாறு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களை வலியுறுத்துவது என முடிவுசெய்யப்பட்டது.

**தீர்மானம் - 15**

தமிழகத்தில் கடந்த 2008ஆம் ஆண்டிற்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட 6 மாநகராட்சிகளில் பணிபுரிந்து வரும் அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி (City Compensatory Allowance) வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு பின்பாக தரம் உயர்த்தப்பட்டுள்ள தாம்பரம், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், நாகர்கோவில், கரூர், ஒசூர், தஞ்சாவூர், கும்பகோணம், தூத்துக்குடி, திருப்பூர், ஆவடி, வேலூர் மற்றும் சிவகாசி உள்ளிட்ட 15 மாநகராட்சிகளில் பணிபுரிந்து வரும் அரசு அலுவலர்களுக்கு இதுவரை நகர ஈட்டுப்படி வழங்கப்படவில்லை. ஆனால் இந்த மாநகராட்சிகளில் வீட்டு வரி, தண்ணீர் வரி மற்றும் சொத்து வரி உள்ளிட்ட அனைத்து வரிகளும் பல மடங்கு உயர்த்தப்பட்டு விட்டது. எனவே இவற்றை ஈடு செய்திடும் விதமாக மேற்கண்ட 15 மாநகராட்சிகளில் பணிபுரிந்து வரும் அரசு ஊழியர்களுக்கும் நகர ஈட்டுப்படியை (City Compensatory Allowance) உடனடியாக வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 16**

தமிழக அரசால் சிறுபான்மையினர் நலனிற்கென தனித்துறை உருவாக்கப்பட்டு இத்துறையில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட 5 துணை ஆட்சியர் நிலையிலான மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் பணியிடங்கள் முழுவதும் சிறுபான்மையினர் நல ஆணையரக ஊழியர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுவிட்டது. ஏற்கனவே நடைமுறையில் உள்ள

விகிதாச்சாரத்தின் அடிப்படையில் வருவாய்த்துறைக்கு உரிய துணை ஆட்சியர் பணியிடங்களை ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடுமாறும், இனி வருங்காலங்களில் ஏற்படுத்தப்படும் புதிய அலுவலகங்களிலும், துணை ஆட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையிலான கண்காணிப்பாளர் பணியிடங்களை நிரப்பிட ஏற்கனவே உள்ள நடைமுறையினை பின்பற்றுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 17**

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், மாநகராட்சிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (TNCSC) மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக்க ழகம் (TASMAC) உள்ளிட்ட அலுவலகங்களில் வருவாய்த்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களில் பிறதுறை அலுவலர்களைக் கொண்டு நிரப்பக்கூடாது என்றும், எந்த நிலையிலும் பணியிட இழப்பு ஏற்படுத்துதல் கூடாது என்றும் தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 18**

16.08.2022, 01.11.2022, 10.05.2023 மற்றும் 16.05.2023 ஆகிய தேதிகளில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உயர் அலுவலர்களுடனான பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அனைத்து கோரிக்கைகளையும் மேலும் காலம் தாழ்த்தாது உடன் நிறைவேற்றிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 19**

முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகிய நிலைகளில் மாவட்ட மாறுதல் கோரி வருவாய் நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பப்படும் முன்மொழிவுகளை பரிசீலனை செய்து ஆணைப் பிறப்பித்திட அதீத கால தாமதம் ஏற்படுகிறது. இதனால் மாவட்ட மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ள வருவாய்த்துறை அலுவலர்கள் மிகுந்த மனச்சோர்வுடன் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் இப்பொருள் தொடர்பாக பெரும்பாலான மாவட்டங்களிலிருந்து தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. எனவே மாவட்டங்களிலிருந்து புள்ளி விவரங்களைப் பெற்று, அதனடிப்படையில் முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள், இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோருக்கும் மாவட்ட மாறுதல் வழங்கிட நடவடிக்கை எடுத்திடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 20**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் கடந்த 02.02.2016, 03.02.2016, 21.02.2016, 04.10.2018 ஆகிய நான்கு நாட்கள் நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தம், மற்றும் 08.01.2019 முதல் 09.01.2019 வரை நடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தம் உள்ளிட்ட 6 நாட்களை பணிக்காலமாக வரன்முறை செய்து ஆணை வழங்கிட தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென முடிவு செய்யயப்பட்டது.

**தீர்மானம் - 21**

தமிழகத்தில் செயல்பட்டுவரும் வெளிநாட்டு மதுபானம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் வடிப்பக ஆலைகளில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற உற்பத்தித் திறனின் அடிப்படையில் கலால் மேற்பார்வை அலுவலர், துணை வட்டாட்சியர் உள்ளிட்ட பணியிடங்கள் மிக குறைந்த அளவில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால் முன்னர் நடைபெற்ற மதுபான உற்பத்தியைவிட தற்போது 10 மடங்கிற்கும் கூடுதலான அளவில் உற்பத்தி நடைபெறுவதால் அங்கு பணிபுரியும் வருவாய்த்துறை அலுவலர்களின் பணிப் பளுவினை கருத்தில் கொண்டு

கூடுதலாக செய்யப்பட்டு வரும் உற்பத்தித் திறனிற்கேற்ப புதிய துணை வட்டாட்சியர் பணியிடங்களை கூடுதலாக ஏற்படுத்திட தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 22**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்ட ஈப்புகள் 20 ஆண்டுகளைக் கடந்து பயன்பாட்டிற்கு தகுதியற்றவைகளாக மாறி பல ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் இதுவரை மேற்கண்ட ஈப்புகளை கழிவு செய்து புதிய ஈப்புகள் வழங்கப்படாததால் பழுதடைந்த ஈப்புகளை வைத்துக் கொண்டு வட்டாட்சியர்கள் சொல்லொணாத் துயரமடைந்து வருகின்றனர். எனவே வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணிபுரிந்து வரும் வட்டாட்சியர்களின் பணியின் முக்கியத்துவம் கருதி பயன்பாட்டிற்குத் தகுதியற்ற ஈப்புகளை கழிவு செய்து, வருவாய் வட்டாட்சியர் உள்ளிட்ட அனைத்து வட்டாட்சியர்களுக்கும் புதிய ஈப்புகள் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 23**

அரசுப் பணியில் பார்வைத்திறன், செவித்திறன் குறைபாடுடைய அலுவலர்களுக்கு பவானிசாகர் அடிப்படை பயிற்சியிலிருந்து ஏற்கனவே விலக்களித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைப் போன்றே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில், பார்வைத்திறன், செவித்திறன் குறைபாடுடைய வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ஒரத்தநாடு நில அளவை மற்றும் நிலவரித் திட்ட பயிற்சியிலிருந்து விலக்களித்து முதுநிலை வருவாய் ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 24**

கொரோனா பெருந்தொற்றின் காரணமாக மூன்றாண்டுகளைக் கடந்தும் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திட இயலாத அலுவலர்களின் தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்து ஆணையிடுவதற்கு, தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கிட பரிந்துரை செய்து வருவாய் நிருவாக ஆணையரால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவின் அடிப்படையில் மாவட்டங்களிலேயே தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்து ஆணையிடுவதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரமளித்திடுமாறு தமிழக அரசினை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 25**

பொது மக்கள் குறைதீர்ப்பு தின மனுக்கள், மாண்புமிகு தமிழக முதல்வரின் தனிப்பரிவு மனுக்கள் மற்றும் முதல்வரின் முகவரி ஆகிய திட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்கள் ஆகியவற்றை முடிவு செய்வதில் A, B, C என தரக்குறியீடு அளிக்கப்படுகிறது. மேற்கண்டவாறு தரக்குறியீடு (Ranking System) அளிக்கப்படுவதால் மனுக்களை முடிவு செய்வதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனால் நிலுவை மனுக்களை குறைத்திட இயலாமல் வட்டாட்சியர்கள் கடும் மன உளைச்சலில் பணிபுரிந்து வருகின்றனர். எனவே குறைதீர்ப்பு மனுக்களை முடிவு செய்வதில் A, B, C என தரக்குறியீடு அளித்திடும் முறையினை முற்றாக கைவிடுமாறு தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 26**

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆகிய துறைகளின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் பள்ளிகள் மற்றும் விடுதிகள் ஆகிய அனைத்தும் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் கொண்டுவரப்படும் நேர்வில் மேற்கண்ட துறைகளிலிருந்து வருவாய்த்துறைக்கு ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள

பணியிடங்களை குறைத்திடக்கூடாது என்று தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 27**

குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பொது விநியோகத் திட்டத்தினை பிரித்து ‘பொது விநியோகத் திட்டத்துறை” என்ற பெயரில் தனித் துறை உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நேர்வில் மேற்படி துறையிலிருந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறைக்கு ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்கள் எதனையும் குறைத்திடக் கூடாது என தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்தவதென்று முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 28**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட மையங்களை மேலும் வலுப்படுத்தி செழுமைப்படுத்திடும் நோக்கில் ஏற்கனவே 8 மண்டல பயிலரங்கம் நடத்திட திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக திருவள்ளூர், கடலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 14 மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட நிர்வாகிகளுக்கு ஸ்தாபன பயிற்சி அளிக்கப்பட்டது. நிலுவையிலுள்ள 5 மண்டலங்களிலும் திட்டமிட்டபடி தொடர்ந்து பயிலரங்கை நடத்திடுவதென தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 29**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைர விழா மாநில மாநாட்டினை எதிர்வரும் டிசம்பர் 2023-ல் தலைநகர் சென்னையில் நடத்திடுவது என்றும், இதற்கு முன்பாக ஆகஸ்ட், செப்டம்பர் 2023 மாதங்களில் வட்ட மாநாடுகள், அதனைத் தொடர்ந்து அக்டோபர், நவம்பர் 2023 மாதங்களில் மாவட்ட மாநாடுகளை நடத்திடுவது என்றும், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் இயக்க வரலாற்றில் முக்கியமான இம்மாநாட்டிற்கு அனைத்து வருவாயத்துறை அலுவலர்களும் ஒரு நாள் ஊதியத்தை வழங்குவதென ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 30**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தை மேலும் வலுப்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும் உறுப்பினர் இணைப்புக் கட்டணம், சங்கக்குரல் சந்தா ஆகியவற்றை 31.08.2023-க்குள் 100% நிறைவு செய்திட மாவட்ட மையங்களை கேட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது. மேலும், சென்னை தலைமையக கட்டட நிதி நிலுவை, சேலம் கோரிக்கை மாநாடு பங்களிப்பு நிதி, அரசு ஊழியர் சங்க மாநாடு நிதி, TNROA நாட்காட்டி மற்றும் நாட்குறிப்பு நிதி உள்ளிட்ட இதர நிதி நிலுவைகளை விரைவில் செலுத்திடவும் வலியுறுத்தப்பட்டது.

இறுதியாக, மாநில பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் அவர்கள் இச்சிறப்பு வாய்ந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்த சிவகங்கை மாவட்ட நிர்வாகிகளுக்கும், கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

| | |
|---|---|
| ஒம்/- | ஒம்/- |
| (சு.சங்கரலிங்கம்) | (எம்.பி.முருகையன்) |
| பொதுச் செயலாளர், | மாநிலத் தலைவர் |
| 82207 6178 | 98432 64332 |


பெறுதல் :-

மாவட்டத் தலைவர், மாவட்டச் செயலாளர், மாவட்டபொருளாளர் மற்றும்
மத்திய செயற்குழு உறுப்பினர்கள், அனைத்துமாவட்டங்கள்.

நகல்: அனைத்து மாநில நிர்வாகிகள்.

■

# தோள்சீலை போராட்ட வரலாறும் - வெற்றியும்



இந்திய வரலாற்றில் நிலங்களையும், வளங்களையும் உண்டுகொழுக்கும் நிலப்பிரபுக்கள் உழைப்பாளி மக்களை அடிமைகளாக அடக்கி, ஒடுக்கி எண்ணற்ற கொடுமைகளை அரங்கேற்றி வந்தனர். இவர்களுக்கு பேராயுதமாக மனுஸ்மிருதி என்ற மனுதர்மம் மனித சமூகத்திற்கு எண்ணற்ற கொடுமைகளை இழைத்தது. பிறப்பால் மனிதனை சாதிய, சமூக கொடுமைகளுக்கு உட்படுத்தியது, பெண்களை அடிமைப்படுத்தியது, குழந்தை திருமணம் -சிசுக்கொலையை அரங்கேற்றியது, கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறும் நியதியை உருவாக்கியது. இந்த நால்வருண முறையில் சூத்திரர்கள் மனிதர்களாவே நடத்தப்படவில்லலை. நால்வர்ண முறைக்கு வெளியில் வாழ்ந்த பஞ்சமர்கள் என்ற பட்டியலின மக்கள் மிருகங்களைவிட கேவலமாக நடத்தப்பட்ட கொடுமைகள் அரங்கேற்றப்பட்டனர். இக்கொடுமைகளை எதிர்த்து இந்திய நாடு முழுவதும் கிளர்ந்தெழுந்த உழைப்பாளி மக்களின் எழுச்சிகளுக்கு பல ஆன்மீகவாதிகளும், முற்போக்கு சிந்தனையாளர்களும் வரலாற்று காலந்தொட்டு குரல்கொடுத்தது வரலாற்று ஏடுகளில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக புத்தர், மகாவீரர், ஜோதிபா பூலே, ராஜாராம் மோகன்ராய், ராமகிருஷ்ண பரமஹம்சர், வள்ளலார், நாராயணகுரு, அய்யன் காளி, ஐயா வைகுண்டசாமி போன்ற பலரையும் குறிப்பிடலாம்.

இன்றுள்ள குமரி மாவட்டம் உள்ளிட்ட அன்றைய தென்திருவிதாங்கூரில் வர்ணாசிரம அதர்மத்தால் வதைக்கப்பட்டு வந்த ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்திய மகத்தான போராட்டம் 'தோள் சீலைப் போராட்டமாகும்" 1822ஆம் ஆண்டு முதல் 1859ஆம் ஆண்டு வரை மிகப்பெரிய எழுச்சியுடன் இப்போராட்டம் நடந்துள்ளது. வர்ணாசிரம அதர்மம் ஏற்படுத்திய ஒடுக்குமுறை அன்று எந்த அளவுக்கு கொடிய விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை அறிந்துகொள்வது இன்றைய காலத்தின் கூடுதல் தேவையாக உள்ளது.

'ஒரு நம்பூதிரி இருக்கும் இடத்திலிருந்து நாடார்கள் மற்றும் ஈழவர்கள் 36 அடி தொலைவிலும், புலையர்கள் 96 அடி தூரத்திலும், நாயர்களிடமிருந்து நாடார்கள் மற்றும் ஈழவர்கள்



12 அடி தூரத்திலும், புலையர்கள் 60 அடி தூரத்திலும் நிற்க வேண்டும்" எனும் அளவுக்கு சாதிவெறி மேலோங்கி இருந்தது. அரசர்-நம்பூதிரிப் பார்ப்பனர் - நாயர் - வேளாளர் ஆகியோரைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் தீண்டப்படாதோர் என்றே கருதப்பட்டனர். ஆதனால் உயர்சாதி நம்பூதிரி - நாயர் - வேளாளர் தவிர பிற சாதியினர் குடை பிடிக்கக்கூடாது, செருப்பு அணியக் கூடாது, கிணறு, குளம், சாலை, சந்தை ஆகியவற்றைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டது. மேலும் ஆண்கள் யாரும் மீசை / தாடி வைத்துக் கொள்ளக்கூடாது. அப்படி வைத்தால் அதற்குத் தனி வரி கட்ட வேண்டும் என்ற கொடிய நிலை நிலவியது.

ஒடுக்கப்பட்ட சாதி ஆண்களுக்கு இவ்வளவு கொடிய கட்டுப்பாடுகள் என்றால் பெண்களைப் பற்றிப் பேசவும் கூடுமோ? பெண்கள் மீது அனைத்துக் கட்டுப்பாடுகளும் திணிக்கப்பட்டன. உயர்சாதிப் பெண்கள் வீட்டை விட்டு அதிகம் வெளியே வரக்கூடாது. கோயில் போன்ற இடங்களுக்கு வரும்பொழுது முகத்தைப் பனைக்குடையால் மறைத்துக் கொண்டு வர வேண்டும். கணவன் மற்றும் நெருங்கிய உறவினர்களைத் தவிர யாரிடமும் பேசக்கூடாது, வெளியே செல்லும்போது மேலாடை அணிந்து கொள்ளலாம். ஆனால் நம்பூதிரிப் பார்ப்பனர்கள் முன்னால் வரும்பொழுது, திறந்த மார்போடுதான் வர வேண்டும் என்பன போன்ற கடுமையான தடைகள் விதிக்கப்பட்டன.

உடைகள் அணிவதில் மிகக் கடுமையான விதிகளைக் கடைபிடிக்குமாறு பெண்கள் நிர்பந்திக்கப்பட்டுள்ளனர். பார்ப்பனரல்லாத, ஒடுக்கப்பட்ட சாதிப் பெண்கள் தங்களின் மார்பகத்தை மறைக்குமாறு ஆடை எதுவும் அணியக் கூடாது எனவும், அப்படி ஆடை அணிந்தால் அதற்கு 'மார்பக வரி" கட்ட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. மார்பக வரி கட்டினால், அப்பெண்கள் பார்ப்பனர் அல்லாதோர் முன்னிலையில் மேலாடை அணிந்து கொள்ளலாம். ஆனால் வரி கட்டி இருந்தாலும், நம்பூதிரிப் பார்ப்பனர்கள் முன் வரும்பொழுது திறந்த மார்போடுதான் வர வேண்டும் என்ற முறை நிலவி வந்தது. இத்தகைய கொடுமைகளை கண்டு கொதித்தெழுந்த விவேகானந்தர் 'சாதிப் பைத்தியங்கள் வாழும் பைத்தியக்கார விடுதி, கேரளம்" என சாடினார்.

இந்தகால கட்டத்தில் குமரி மாவட்டத்தில் தோன்றிய முத்துக்குட்டி சாமிகள்என்று அழைக்கப்பட்ட ஐயா வைகுண்டர் அவர்கள் இக்கொடுமைகளை எதிர்த்தும், பிரம்மனின் வாரிசெனக் கூறிக் கொண்டு, தங்களுக்கே அனைத்தையும் ஏகபோக உரிமையாக்கிக் கொண்ட பிராமணர்கள், தென் திருவிதாங்கூர் பகுதியில் பெரும்பான்மையினரின் தாழ்வு நிலைக்கு காரணமாக இருந்ததை கண்டு வெளிப்படையாக தாக்கினார். சாதி பேதமின்றி மக்கள் வாழ வேண்டுமென்றும், பொதுக்கிணறுகளில் குளிப்பதற்கும், உணவு அருந்துவதற்கும் உரிமை வேண்டுமென்றும், சாதிய வேற்றுமைகளை முற்றாக ஒழிக்க வேண்டுமென்றும் குரல் கொடுத்ததோடு பெண்கள் திறந்த மார்பகங்களோடு இருக்கக்கூடாது எனவும், இந்த இழிநிலையினை அகற்றிட வேண்டுமெனவும் குரல் கொடுத்தார். இவரது குரல் மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பெண்கள் தங்கள் வழக்கத்தினை மாற்றி, உயர் சாதியினரைப் போன்று உடை அணிந்து வெளிவந்தனர்.



இதே காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவாக இறைப்பணி செய்ய வந்த கிறித்துவ மிஷினரிகள் சாதிய துவேசங்களை எதிர்த்தும், அனைவருக்கும் கல்வி போதிக்கிற பணிகளை மேற்கொண்டனர். கல்வி வளர்ச்சியினால் விழிப்புணர்வு பெற்ற மக்கள் தங்கள் உரிமைகளுக்காக போராட அணி திரண்டனர். வர்ணாசிரம தர்மத்தினால் வடிவமைக்கப்பட்ட சாதிய கொடுமைகள், ஒடுக்குமுறைகள், பெண்ணடிமைத்தனம் போன்ற கொடுமைகள் ஒடுக்கப்பட்ட மக்கள் கிருத்துவ மதத்தை தழுவ வேண்டிய நிலை ஏற்பட்டது. கிறித்துவ பெண்கள் மேலாடை அணிந்து நடமாடுவதை ஏற்றுக் கொள்ளாத உயர்சாதி பிராமணர்கள், நாயர்கள் இவர்கள் மீது கொடூராமான தாக்குதல்களைத் தொடுத்தனர்.

1822ம் ஆண்டு கொத்தவிளை கிராமத்தில் சிறிய கலவரமாக ஆரம்பித்து சுமார் 37 ஆண்டுகள் வரை நீண்ட, நெடிய போராட்டமாக இப்போராட்டம் நீடித்தது, 1822 முதல் 1823 வரையிலும் முதற்கட்டமாகவும், இரண்டாவது கட்டமாக 1827-1829 வரையிலும், மூன்றாவது கட்டமாக 1858-59 வரையிலும் நடைபெற்றது. கிறித்துவ மதத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் மிஷினிரிகள் நடத்திய போராட்டத்தோடு ஐயா வைகுண்ட சாமியால் தைரியமும், உத்வேகமும் ஊட்டப்பட்ட இந்து சமயத்தைச் சார்ந்த பெண்களும் மேலாடை அணிந்து போராட்டத்தில் இறங்கினார்கள்.

1855ம் ஆண்டு வெளியான அடிமைகள் விடுதலை பிரகடனமும் இப்போராட்டத்தை மேலும் ஊக்கப்படுத்தியது. நிலவுடமையாளர்களாக இருந்த உயர்சாதியினருக்கு இப்பிரகடனம் பெரும் எரிச்சலை ஏற்படுத்தியது. 1858 ம் ஆண்டு இப்போராட்டம் தீவிரமடைந்து டிசம்பர் மாதம் 30ம் நாள் கோட்டாறு கடைவீதியில் பெரும் கலவரம் மூண்டது. வீடுகள், சந்தைகள், கடைகள், தேவாலயங்கள் தீக்கரையாக்கப்பட்டன. கிராமம், கிராமமாக கலவரம் பரவியது. இந்து - கிறித்துவ - நாடார் மக்கள் வேறுபாடின்றி ஓரணியில் திரண்டு போராடினர். எதிரணியில் திரண்டு வந்த உயர்சாதி கூட்டணியருக்கு சரியான பதிலடி கொடுத்தனர். இதன் விளைவாக ஆங்கில அரசின் வற்புறுத்தலின் பேரில் திருவிதாங்கூர் திவானும், மகாராஜாவும் நாடார் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒரு அறிக்கை வெளியிட்டனர். அதன் மூலம் நாடார் பெண்கள் கிறித்துவ பெண்களைப் போல மார்பகங்களை ஏதாவது ஒரு வகையில் மறைத்துக் கொள்ளலாம் என ஆணை வெளியிட்டது. ஆனால், நாடார் சமுதாயப் பெண்களுக்கு கிடைத்த உரிமை பிற தாழ்த்தப்பட்ட பகுதி பெண்களுக்கு கிடைக்கவில்லை. எனவே, தங்களுக்கும் இத்தகைய உரிமை வேண்டுமென ஈழவர் போன்ற பிற ஒடுக்கப்பட்ட சாதியினரும் போராட்டத்தை தொடங்கியதன் விளைவாக 1865ம் ஆண்டு திருவிதாங்கூர் மன்னர் வெளியிட்ட அறிவிப்பின் மூலம் இவர்களும் மேலாடை அணிவதற்கான உரிமைகளைப் பெற்றனர்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடைபெற்ற தோள் சீலைப் போராட்டம் வர்ணாசிரம தர்மத்தையும், அதன் கொடுமைகளையும் எதிர்த்து நடந்த வீரம்செறிந்த போராட்டமாகும். சனாதன கொடுமைகளை எதிர்த்து தோள் சீலை அணிவதற்கே பல்லாண்டுகள் போராடிதான் வெற்றிபெற முடிந்தது.

**- இரா.மங்களபாண்டியன்**

மாநில துணைத்தலைவா

# நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பு: தமிழ்நாடு உணர வேண்டிய உண்மைகள்

அதிகரித்துவரும் விவசாயம் - பொருளா தார நடவடிக்கைகள் காரணமாக நீருக்கான தேவையும் இந்தியாவில் தொடர்ந்து அதிகரித்துவருகிறது. ஆனால், எதிர் காலப் பயன்பாட்டுக்குத் தேவையான நீரின் அளவு பல்வேறு மாநிலங்களில் வேகமாகக் குறைந்து வருகிறது. மத்திய நீர்வள அமைச்சகம் வெளியிட்டுள்ள மதிப்பீட்டின்படி, 2050ஆம் ஆண்டுக்குள் தண்ணீரின் தேவைக்கும் அளிப்புக்குமான இடைவெளி மிக அதிகமாக இருக்கும் என்பது புலனாகிறது.

இதன் காரணமாக மழைக் காலங்களில் நீர்நிலைகளின் சேமிப்புத் திறனை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. ஆனால், பிப்ரவரி 2023இல் மத்திய நீர்வள அமைச்சகத்தால் முதன்முறையாக வெளியிடப்பட்டுள்ள நீர்நிலைகள் பற்றிய முதல் மொத்தக் கணக்கெடுப்பு (First Census on Water Bodies), இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கிறது. குறிப்பாக, தனிநபர் சராசரி நீர் அளவின்படி தண்ணீப் பஞ்சம் மிகவும் அதிகமாக உள்ள தமிழ்நாட்டில், நீர்நிலைகள் மிகவும் அதிமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

கணக்கெடுப்பின் முடிவுகள்: இதுவரை எந்த ஆதாரங்களிலிருந்தும் கிடைக்காத பல முக்கியத் தரவுகளை நீர்நிலைகளின் முதல் மொத்தக் கணக்கெடுப்பு முதன் முதலாக வெளிக்கொண்டு வந்திருக்கிறது. இந்தியாவில் மொத்தம் 24,24,540 நீர்நிலைகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை குட்டைகள் (59.5%). இவற்றைத் தவிர, குளங்கள் (15.7%), அணைகள் (12.1%), மீதமுள்ள 12.7% மற்ற நீர் ஆதாரங்கள் என இக்கணக்கெடுப்பில் தெரியவந்திருக்கிறது.

எதிர்பார்த்தபடி, கணக்கிடப்பட்டுள்ள மொத்த நீர்நிலைகளில், 97.1% கிராமப்புறங்களிலும் மீதமுள்ள 2.9% நகர்ப்புறங்களிலும் அமைந் துள்ளன. மொத்த நீர்நிலைகளில் 83.7% பயன்பாட்டில் இருக்கின்றன. மீதமுள்ள 16.3% (3,94,500) நீர்நிலைகள் வறட்சி, கட்டுமானம், வண்டல் மண் படிதல், பழுது பார்ப்பு, உப்புத்தன்மை, தொழிற்சாலைக் கழிவுகள் கலந்திருப்பது போன்ற காரணங்களால் பயன்பாட்டில் இல்லை.

நீர்நிலைகளின் உரிமையைப் பொறுத்தவரை, 55.2% தனியாருக்குச் சொந்தமானவை என்றும், மீதமுள்ள 44.8% பொதுத் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. பெரும்பாலான நீர்நிலைகள் (78%) மனிதர்களால் உருவாக்கப்பட்டவை. 22% மட்டுமே இயற்கையாக உருவானவை. பெரும்பாலான நீர்நிலைகள் மண்ணால் ஆனவை. இதன் கட்டுமானச் செலவு ரூ.1,00,000க்கும் குறைவாக இருக்கக் கூடும் என்கிறது இந்தக் கணக்கெடுப்பு. கிட்டத்தட்ட பாதி நீர்நிலைகளின் நீர் சேமிப்புத் திறன் 1,000 முதல் 10,000 கன மீட்டர்கள் வரை உள்ளது.

ஆக்கிரமிப்பு நிலை: நீர்நிலைகளின் முதல் மொத்தக் கணக்கெடுப்பின் முக்கியமான முடிவுகளில் ஒன்று, வெவ்வேறு மாநிலங்களில் எந்த அளவுக்கு நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன என்பதைப் பற்றியதாகும். அரசால் அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்கள் - ஆராய்ச்சியாளர்கள் நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பின் தீவிரத்தைத் தொடர்ச்சியாகப் பதிவுசெய்து வந்தாலும், எந்த ஓர் அரசுத் துறையும் ஆக்கிரமிப்பின் அளவு குறித்த தரவுகளை இதுவரை வெளியிடவில்லை. நம் நாட்டில் பல்வேறு பகுதிகளில் மொத்தமாக 38,496 நீர்நிலைகள் (பெரும்பாலும் குளங்கள், குட்டைகள்) ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக இக்கணக்கெடுப்பின் தரவுகள் காட்டுகின்றன.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நீர்நிலைகளில், சுமார் 93% சிறிய நீர்நிலைகள் (குளங்கள், குட்டைகள், ஏரிகள்) என்பதால், இவை எங்கு அமைந்துள்ளன என்பதைப் புரிந்துகொள்வது முக்கியமானது. மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில், ஆக்கிரமிப்பு மிக அதிகமாகக் கண்டறியப்பட்ட முதல் ஐந்து மாநிலங்கள் உத்தரப் பிரதேசம் (15,213), தமிழ்நாடு (7,828), தெலங்கானா (2,748), ஆந்திரப் பிரதேசம் (2,733), மத்தியப் பிரதேசம் (1,765).

இதில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு, தெலங்கானா ஆகிய நான்கு தென் மாநிலங்களின் பங்கு, இந்தியாவில் மொத்தமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நீர்நிலைகளில் சுமார் 40% (14,219) ஆகும். நீர்நிலைகள் ஆக்கிரமிப்பில் தமிழ்நாட்டின் பங்கு மட்டும் ஏறக்குறைய 22%. இவை என்ன சொல்கின்றன? பல நூற்றாண்டுகளாகச் சிறிய நீர்நிலைகள், தென் மாநிலங்களில் மிக அதிகமாக ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன.

விளைவுகள்: நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பு பல்வேறு விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துகிறது. நீர்நிலைகளின் நீர்பரப்புப் பகுதியில் (water spread area) பெருமளவில் ஆக்கிரமிப்பு நடப்பதால், நீர்க் கொள்ளளவுத் திறன் குறைந்து பாசனப் பரப்பளவைக் குறைத்துவிடுகிறது. பல்வேறு மாநிலங்களில் குளங்கள் மூலம் பாசனம் பெறும் பரப்பளவு பற்றிய தரவுகள் நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பு எந்த அளவுக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதை உறுதிப்படுத்துகின்றன. உதாரணமாக, மொத்த மழையளவில் பெரிய மாற்றங்கள் இல்லாதபோதும், இந்தியாவில் குளங்கள் வழி பாசனப் பரப்பளவு 1960-61 இல் 46.30 லட்சம் ஹெக்டேரிலிருந்து 2019-20 இல் 16.68 லட்சம் ஹெக்டேர்களாகக் குறைந்துள்ளது.

இதேபோல், ஆக்கிரமிப்பு மட்டத்தில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் உள்ள தமிழ்நாட்டில், குளங்கள் மூலம் கிடைக்கும் பாசனப் பரப்பளவு 9.36 லட்சம் ஹெக்டேரிலிருந்து 3.72 லட்சம் ஹெக்டேர்களாகக் குறைந்துள்ளது. ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், தெலங்கானா போன்ற பிற தென்னிந்திய மாநிலங்களிலும் இதேபோன்று குளங்களின் நீர்ப்பாசனப் பரப்பளவு தொடர்ந்து குறைந்துவருகிறது.

அரசுகளின் பொறுப்பு: ஆக்கிரமிப்பால் நீர்நிலைகளில் நீர்க் கொள்ளளவு குறைவதால் பாசனப் பகுதியில் அமைந்துள்ள கிணறுகளின் நீர் சுரக்கும் (recharging of wells) திறனும் குறைகிறது. மத்திய அரசு வெளியிட்டுள்ள பல்வேறு சிறிய நீர்நிலைகளின் நீர்ப்பாசனக் கணக்கெடுப்புகளில் இருந்து (Minor Irrigation Census) கிடைக்கும் தரவுகள், ஆக்கிரமிப்பு காரணமாகச்செயலிழந்த கிணறுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைக் காட்டுகின்றன.





நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பு காரணமாக மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளச் சேதம் அதிகரித்துவருவதையும் சமீபத்திய அனுபவங்கள் கூறுகின்றன. எனவே, நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை எவ்விதச் சமரசமும் இன்றி அகற்ற மத்திய, மாநில அரசுகள் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

'நீர்நிலைகளைப் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் - மறுசீரமைத்தல்' என்கிற மத்திய அரசின்நீர்வள நிலைக்குழுவின் 16வது அறிக்கையானது, பல்வேறு மாநிலங்களில் உள்ள பெரும்பாலான நீர்நிலைகள் அரசு நிறுவனங்களால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளதாகக் கோடிட்டுக் காட்டியுள்ளது. எனவே, தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகரித்து வரும் நிலையைக் கருத்தில்கொண்டு, நீர்நிலைகளை ஆக்கிரமிப்பதை மாநில அரசுகள் நிறுத்த வேண்டும்.நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகள் அதிகரித்துள்ளதைக் கருத்தில்கொண்டு, செப்டம்பர் 6, 2014 அன்று சென்னை உயர் நீதிமன்ற மதுரைக்கிளை, நீர்நிலைகளில் அமைந்துள்ள நிலங்களில் தளவமைப்பு (layout), கட்டிடத் திட்டத்துக்கு அனுமதி வழங்கக் கூடாது எனத் தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பை மதித்து, மாநில அரசுகள் முழு அக்கறையோடு அதனைச் செயல்படுத்த வேண்டும். அதிர்ச்சியூட்டும் வகையில், மொத்தம் 10,95,913 நீர்நிலைகளில் நீண்ட காலமாக எந்தச் சீரமைப்பு வேலைகளும் செய்யப்படவில்லை என நீர்நிலைகளின் கணக்கெடுப்புத் தரவுகள் தெரிவிக்கின்றன.

அதற்கு மாநில அரசுகளின் நிதிப் பற்றாக்குறையும் ஒரு காரணமாக இருக்கலாம். எனவே, 11 ஆவது திட்டக் காலத்தில் செயல்படுத் தப்பட்ட நீர்நிலைகளைப் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் - மறுசீரமைப்பு செய்தல் (Repair, Renovation and Restoration) திட்டத்தை மீண்டும் கொண்டுவந்து, மராமத்துப் பணிகள் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது அவசியம். காலநிலை மாற்றத்தால் மழைப் பொழிவின் அளவில் மாறுபாடு அதிகரித்துவருவதைப் பார்க்கிறோம். இந்தச் சூழலில், நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீரின் கொள்ளளவுத் திறனை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், வருங்காலத்தில் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் தண்ணீர்ப் பஞ்சம் மேலும் அதிகரிக்கும்.

- நன்றி : தி இந்து தமிழ் தென்திசை

# TNROA-வும் திருவாரூர் மாவட்டமும்

**2018**ஆம் ஆண்டு ஏற்பட்ட கஜா புயலின் கோர தாண்டவத்தினால் இதுவரை கண்டிராத அளவிற்கு டெல்டா மக்கள் பெரும் பாதிப்படைந்தனர் என்பதை வெறும் வார்த்தைகளால் கூறிவிட முடியாது. அதனை களத்தில் இருந்து நேரில் பார்த்திருந்தால் மட்டுமே அதன் பாதிப்புகளை உணரமுடியும் என்பது எதார்த்தம்.

அன்று மாலை சுமார் 7.00 மணி இருக்கும். கஜா புயல் மீட்பு பணியில் உள்ள அலுவலர்களுக்கான கூட்டம், திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என்ற தகவல் எங்கள் எல்லோருக்கும் கிடைத்தவுடன், களப்பணி மற்றும் மேற்பார்வையில் ஈடுபட்டிருந்த நாங்கள் அனைவரும் நீண்ட நாட்கள் சாப்பிடாத பெரும் பசியோடு திருவாரூர் கிளம்பினோம்.

வீட்டிலிருந்து வந்து 15 நாட்களுக்கு மேலாகி விட்டது. மனைவி, கணவர் மற்றும் குழந்தைகளை நேரில் பார்க்கவும் முடியவில்லை. தொலைத் தொடர்பு சாதனங்கள் இயங்கவில்லை என்பதனால் அவைகளும் பயனளிக்கவில்லை. மக்களுக்கான ஒரு அத்தியாவசிய பணியில் உள்ள நாம், நமது குடும்பத்தினை பிறகு பார்த்துக் கொள்ளலாம். பொதுமக்களில் எவரையும் இழந்து விட்டதாக அவப்பெயர் வந்துவிடக்கூடாது என்ற வருவாய்த்துறைக்கே உள்ள கடமை உணர்வோடு, அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் கிடைக்கவில்லை என்று பொது மக்களிடம் ஏற்பட்டிருக்கின்ற கடும் கோபம், எண்ணற்ற சாலை மறியலில் சமாதான பேச்சுவார்த்தைகள், நேரம் தவறிய அத்தியாவசிய பணி இவைகளால் கூட்டத்தில் அமர்ந்திருந்த பொழுது நாங்கள் அனைவரும் களைத்துதான் போயிருந்தோம்.

அப்பொழுது எனது வருவாய் வட்டாட்சியர் அவர்கள், மன்னார்குடி வட்டாட்சியரை மாவட்ட நிர்வாகத்தினர் பணியிடை நீக்கம் செய்துவிட்டனர் என்ற அதிர்ச்சியான செய்தியினை கூறினார்.

நான் உடனே அவரை பார்த்தபோது, இரவு-பகலென்று பாராமல் உழைத்தினால் ஏற்பட்ட கடுமையான களைப்பில் கையில் உள்ள குறிப்பு நோட்டில் புள்ளிவிவரங்களை எழுதுவதும், தன்னை அறியாமல் கையில் வைத்திருக்கின்ற பேனாவை கீழே போடுவதுமாக இருந்தார். நான் உடனே இந்த செய்தியினை உறுதிப்படுத்த நினைத்து, அருகில் இருந்த நமது சங்க மாவட்ட தலைவர் தோழர்.எஸ்.மகேஷ் அவர்களை அழைத்துக்கொண்டு அருகாமையில் உள்ள A -பிரிவிற்கு சென்று உண்மை நிலைமையினை அறிய நினைத்தோம். அங்கே...அப்படி ஏதும் நடப்பதற்கான அறிகுறி கொஞ்சம் கூட தெரியவில்லை.

பிறகு GDP கூட்ட அறைக்கு சென்றபொழுது அப்பொழுது அங்கே மன்னார்குடி வட்டாட்சியர் திருமதி.ஸ்ரீதேவி சிவானந்தம் அவர்கள் இருக்கையில் இல்லாததை கண்டு, அருகில் இருந்த மன்னார்குடி மண்டல துணை வட்டாட்சியர் தோழர்.சந்திரமோகனிடம் விவரம் கேட்டபொழுது, மன்னார்குடி வட்டாட்சியரை பணியிடை நீக்கம் செய்ததினால் அவர் கஜா புயல் நிவாரண கூட்டத்தில் கலந்துக்கொள்ள கூடாது என PA (G) அழைத்துவர சொன்னதாக ஒரு அலுவலக உதவியாளர் அழைத்து சென்றதாக கூறினார்.

இது எங்களுக்கு மேலும் கடும் கோபத்தினை உண்டாக்கியது. கூட்டத்தில் இருக்கின்ற ஒரு வட்டாட்சியரை கூட்டத்தில் கலந்துக்கொள்ள கூடாது என கூறியது ஒரு அவமானகரமான செயல். எனவே இதனை விடக்கூடாது என்றெண்ணி நாங்கள் இருவரும் PA (G) ஐ சந்தித்து விவரம் கேட்டபொழுது அவர் வாய்விட்டு கூறாமல் ஆமாம் என்பதுபோல் தலையாட்டினார்.

அங்கிருந்து வேகமாக கிளம்பிய நாங்கள் GDP கூட்ட அறையில் நுழைந்தபொழுது அப்போதைய உணவத்துறை அமைச்சர் அவர்கள் பத்திரிக்கையாளர்களிடம் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அந்த GDP கூட்ட அறையில் சுமார் 300-க்கும் மேற்பட்ட பல்வேறு

துறை அலுவலர்களும், வெளி மாவட்டங்களிலிருந்து வந்த 10க்கும் மேற்பட்ட மூத்த IAS அதிகாரிகளும், முந்தைய ஆட்சியில் கோலோச்சிய அமைச்சர் பெருமக்களும் உடன் இருந்தனர்.

"மன்னார்குடி வட்டாட்சியர் திருமதிஸ்ரீதேவி சிவானந்தம் அவர்களை அமைச்சரது தொலைபேசியை எடுக்கவில்லை என்ற ஒரு பொய்யான காரணத்தினை சொல்லி பணியிடை நீக்கம் செய்துவிட்டனர். ஆனால் வட்டாட்சியர், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களோடு இருந்துள்ளார். இதனை சாதாரணமாக விட முடியாது. அனைத்து வருவாய்த்துறை ஊழியர்களும் கிளம்புங்கள் போராட்டம் துவங்கிவிட்டது என நாங்கள் இருவரும் சொன்னதுதான்...-

குபிரென்று கூட்டத்தில் இருந்த 30க்கும் குறைவான வருவாய்த்துறை ஊழியர்கள்...அரசை எதிர்த்து கோசத்துடன்...கோபாவேசத்துடன் வரண்டா வழியே வெளியே வந்தனர். அப்பொழுது அமைச்சரை டிவியில் பேட்டி எடுத்துக்கொண்டிருந்த டிவி சேனல்கள் அனைத்தும் எங்கள் பக்கம் திரும்பி..நாங்கள் கோசத்துடன் வெளியேறுவதை படம்பிடித்துக்கொண்டிருந்தது. இது நடைபெற்றபோது மணி சுமார் 12.00 மணி இருக்கும். அப்பொழுது மாநில தலைவர் அவர்களை தொடர்புக்கொண்டு நடந்த விவரத்தினை தெளிவாக எடுத்துரைத்தோம். மாநில மையமும் போராட்டத்தினை தொடர்ந்து நடத்துங்கள் என ஆதரவளித்தது.

ஒரு பக்கம் ஒரு மினி அரசாங்கத்திற்குரிய அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக அன்றைய கூட்டத்திற்கு வந்த 33 வருவாய்த்துறை ஊழியர்களை மட்டும் வைத்துக்கொண்டு, வாசலில் அமர்ந்து தர்ணா போராட்டம் துவங்கி நடத்திக்கொண்டிருக்கின்றோம். மற்றொரு பக்கம் பெரும்பாலான வருவாய்த்துறை ஊழியர்களும் கஜா பணியை முடித்து வீட்டிருக்கு சென்றுவிட்டனர். பணி களைப்பில் தூங்கிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு போராட்டம் குறித்து தெரிய வாய்ப்பில்லை. அவர்களை தற்பொழுது தூக்கத்திலிருந்து எழுப்புவது சாத்தியப்பட்டுவராது என்றெண்ணி...அருகாமையில் தோழர்.டி.அசோக், தோழர்.டி.விஜய் ஆனந்த் மற்றும் தோழர்.பி.கமலகண்ணன் உள்ளிட்ட தோழர்களை உடன் வரவழைத்தோம். நேரம் ஆக, ஆக சுமார் 50க்கும் மேற்பட்ட தோழர்கள் போராட்ட இடத்திற்கு வந்துவிட்டனர். இத்துடன் TNGEA தோழர்களும் வந்துவிட்டனர்.

மற்றொரு பக்கம் போராட்டத்தினை தலைமை தாங்கி நடத்திக்கொண்டிருக்கின்ற ஒருசில தோழர்கள் மீது கடும் கோபத்தினை காவல்துறை உயர் அதிகாரிகள் காட்டிகொண்டிருக்கின்றனர். காவல்துறையினர்நூற்றுக்கணக்கில் துப்பாக்கியுடன் குவிக்கப்படுகின்றனர். போராடிக்கொண்டிருக்கின்ற நாங்கள் காவல்துறையினரால் ஒருகட்டத்தில் சுற்றி வளைக்கப்பட்டோம்.

எதுவரினும் எதிர்த்து நின்றே பழக்கப்பட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்திற்கு எதிராக எதுவும் நிற்க முடியாது...என்ன நடக்கிறது என்பதை பார்ப்போம்... ஒரு கை பார்த்துவிடுவது என தீர்க்கமாக முடிவெடுத்தோம்.

போராட்டத்திற்கு தலைமை தாங்கும் நபரது பெயர், வீட்டு முகவரி, பின்புலம், வேலைக்கு வந்த விதம், அவரது சொத்து போன்ற விவரங்கள் அவசர கதியில் காவல்துறையினரிடம் கேட்கப்பட்டதாக தகவல் வந்தது. யாரை தட்டினால் போராட்டத்தினை ஒடுக்கலாம் என 13க்கும் மேற்பட்ட IAS அதிகாரிகளும், உயர் அமைச்சர்களும் மினி கூட்ட அரங்கில் விவாதித்தனர். அவர்களுக்கு இது ஒரு கௌரவ பிரச்சினையாக ஆகிவிட்டது. ஆனால் அவர்களால் போராட்டத்திற்கு தலைமை தாங்கும் தோழர்களுக்கு எதிராக எதையும் எடுக்க முடியவில்லை.. அதற்கு வாய்ப்பும் இல்லை..

மன்னார்குடி வட்டாட்சியரை பணியிடை நீக்கம் செய்யப்பட்ட செய்தி அனைத்து டிவி சேனல்களிலும் ஓடிக்கொண்டிருக்கின்றது என்ற செய்தியும், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களையும், இரு வருவாய் கோட்ட அலுவலகங்களையும் பூட்டுங்கள் என்றவுடன்

தோழர்கள் பூட்டிய படத்தினை வாட்ஸ்அப்-பில் போடும் செய்தியும் ஒருங்கே எங்களுக்கு வந்துக்கொண்டிருக்கின்றது.

இதற்கிடையில் DRO அவர்கள் எங்களை நேரில் சந்தித்து போராட்டத்தினை கைவிடுங்கள். பொதுமக்களுக்கான நிவாரண பணிகள் பாதிக்கிறது என்று எங்களை பாசத்தோடு மிரட்டிவிட்டு சென்றார்.

பிறகுதான் தெரிந்தது மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களே இப்பிரச்சினை குறித்து அமைச்சர்களிடமும், மாவட்ட ஆட்சியரிடமும் பேசியதாகவும், அவரும் கடும் கோபத்தில் உள்ளதாகவும் கூறினர். போராட்டத்தினை நடத்திக்கொண்டிருக்கின்ற தலைமைக்குழுவான எங்களுக்குள் போராட்ட யுக்தியினை எவருக்கும் தெரியாமல் / கசிந்துவிடாதபடி அவ்வப்பொழுது மாற்றிக்கொண்டிருந்தோம்.....அதனை மற்றவர்களுடன் பகிர்ந்துக்கொண்டால் நமது சங்கத்திற்கும், கலந்துக்கொண்ட தோழர்களுக்கும் பெரும் பாதிப்பாக வந்துவிடும் என்பதால் போராட்ட தலைமைக்குழுவினை உடன் அமைத்து அந்த தோழர்கள் மட்டும் அதனை ரகசியமாக வைத்துக்கொண்டோம்.

அப்பொழுது ஒரு பல தோழர்கள் வந்து, தோழர் போராட்டத்தினை காலவரையற்ற போராட்டமாக அறிவியுங்கள் என்றும், காத்திருப்பு போராட்டமாக அறிவியுங்கள்... அப்பொழுதாவது எனது மனைவி, கணவர் மற்றும் மக்களை பார்க்கும் வாய்ப்பாக இருக்கும்... நான் வீட்டை விட்டு வந்து வெகு நாட்களாகிவிட்டது என்று தன்னுடைய கவலையினை கண்ணீர் மல்க கூறிச்சென்றனர். போராட்ட களத்தில் இருந்த ஒவ்வொரு ஊழியரது நிலையும் ஒவ்வொன்றாக இருந்தது. ஆனால் தலைமைக்குழுவான எங்களிடம் ஒரு தெளிவான முடிவு இருந்தது.

ஒரு போராட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் முன்பாக, போராட்டத்தினை துவங்கி நடத்திக்கொண்டிருக்கும்பொழுதே....போராட்டத்தினை எந்த (இடத்தில்) நிலையில் முடிப்பது என்பதை அப்பொழுதே நாங்கள் இறுதிபடுத்தி வைத்துக்கொண்டோம்.

"அந்த முடிவானது...போராட்டத்தினை எத்தனை நாள் ஆனாலும் தொடர்ந்து நடத்துவார்கள் என்பது போன்று நாம் நடந்துக்கொள்ள வேண்டும். ஆனால் விடிவதற்குள் போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்பதே.."

இந்தபோராட்டம் அவ்வளவு எளிதில் வெற்றியை தராது.. ஏனெனில் நாம் போராடிக்கொண்டிருப்பது 10க்கும் மேற்பட்ட IAS அதிகாரிகளோடும்....அரசியலில் தேர்ந்த 5 அமைச்சர்களோடும்...

அதன் அடிப்படையில் .

1) இந்த போராட்டத்தினை விடியும்வரை நீட்டித்தால்..விடிந்தவுடன் போராட்டம் உயர் அதிகாரிகளது/ அமைச்சர்களது பல்முனை தாக்குதலால் சிதறுண்டு போகும்..

2) காத்திருப்பு போராட்டத்தினை அறிவித்தால்...ஒரு கட்டத்தில் பொதுமக்களுக்கான கஜா நிவாரண பணியை வைத்து, பொதுமக்களை நமக்கு எதிராக திருப்பிவிட வாய்ப்பு உள்ளது. இதனால் வெற்றிபெறாமல் போராட்டம் நீர்த்துப் போவது மட்டுமல்லாது... போராட்டத்தில் இருந்த அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை பாயும்..

எனவே, போராட்டத்தினை இன்று இரவே முடிப்பது அதற்குள் வருவாய் வட்டாட்சியரசு பணியிடை நீக்க உத்தரவினை திரும்பப் பெற வைப்பது என திட்டமிட்டு அதற்கான அனைத்து வித யுக்திகளையும்கையாளுவது என முடிவெடுத்தோம்.

சம்மந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியரை அழைத்து நீங்கள் மன்னார்குடி வருவாய் வட்டாட்சியர் பணி வேண்டாம்... வேற பணியிடம் கேட்டு எழுதி கொடுங்கள் என நிர்வாகம் கடிதம் போட்டது. பணிநீக்கம் செய்யப்பட்ட வட்டாட்சியரை நிர்வாகிகளுக்கு எதிராக திருப்பி

விடுவதற்கான வேலைகளையும் நிர்வாகம் மேற்கொண்டது. ஆனால் அனைத்தும் வீணானது. இரவு 1.25 மணி இருக்கும். வேற வழியில்லை சங்கம் இந்த மாவட்டத்தில் மிகவும் வலுவாக உள்ளது...இவர்களை பகைத்துக்கொண்டால் கஜா நிவாரண பணிக்கு இவர்கள் வரமாட்டார்கள் என்று நினைத்து தங்களது கௌரவத்தையெல்லாம் விட்டு விட்டு அனைத்து அமைச்சர்களும், அனைத்து IAS அதிகாரிகளும் பின்வாங்கி ஒரு முடிவிற்கு வந்தனர்.

அதே DRO வந்து மூன்றாவதாக..இறுதியாக வந்து சொன்னார்....உங்களது கோரிக்கை வெற்றிபெற்றது...அதே வருவாய் வட்டாட்சியரை அதே இடத்தில் மீண்டும் பணி அமர்த்துவது என மாவட்ட நிர்வாகம் முடிவெடுத்துவிட்டது என்றார்.எல்லோருக்கும் ஒரே சந்தோசம்....ஆனந்தத்துடன் கட்டி பிடித்துக்கொண்டனர். ஆனால், நமது தரப்பிலிருந்து போராட்டம் இன்னும் முடியவில்லை என்றோம்...எல்லோருக்கும் ஒரே அதிர்ச்சி..நமது கோரிக்கை நிறைவேறி விட்டதே என தோழர்கள் கேட்டனர்.

நாம் சொன்னோம். எல்லா டிவி சேனல்களிலும் மன்னார்குடி வருவாய் வட்டாட்சியர் திருமதி.ஸ்ரீதேவி சிவானந்தம் பணி இடை நீக்கம் என செய்தி ஓடிக்கொண்டிருக்கின்றது.... அதனை மாற்றி பணியிடை நீக்கம் ரத்து என ஓடினால் மட்டுமே போராட்டத்தினை வாபஸ் பெறுவோம் என்றோம்...

DRO அவர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவே இல்லை...நாம் விடவில்லை... போராட்டம் தொடர்கிறது என்றோம் .மீண்டும் அவர் அமைச்சர்களோடு பேசி கீழே வந்து நமது கோரிக்கையினை ஒத்துக்கொண்டதாக அறிவித்தார். எல்லா டிவி சேனல்களிலும் அடுத்த 15 நிமிட நேரத்தில் பணியிடை நீக்கம் ரத்து என செய்தி ஓடியது.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி பகுதியில் கஜா புயல் நிவாரண முகாம்களை பார்வையிட வருகைத்தந்த மதிப்பிற்குரிய தமிழக ஆளுனரோடு பணியில் இருந்த வருவாய் வட்டாட்சியர் திருமதி.ஸ்ரீதேவி சிவானந்தம் அவர்களை அமைச்சரது தொலைபேசியினை எடுக்கவில்லை என்பதற்காக பணியிடை நீக்கம் செய்யப்பட்டது தவறு என்பதை மாவட்ட நிர்வாகமும், வெளி மாவட்டங்களிலிருந்து கஜா பணிக்காக வந்திருந்த உயர் அலுவலர்களும், 5 அமைச்சர்களும் ஏற்றுக்கொண்டு, அதே மன்னார்குடி வருவாய் வட்டாட்சியராக திருமதி.ஸ்ரீதேவி சிவானந்தம் அவர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கிவிட்டுதான் கீழே இறங்கி வந்தனர்..

இந்த போராட்டம் ஒரு சாதாரண போராட்டமாக பார்க்க முடியாது..ஒரு கூர்மையான கத்தியில் நின்று நடத்திய ஒரு அற்புதமான போராட்டமாகும்வெற்றி பெற்றதினால் நாங்கள் அனைவதும் வேலையில் உள்ளோம்...அப்போராட்டம் தோல்வியடைந்திருந்தால் ஒரு மினி அரசாங்கத்தினை எதிர்த்து போராடிய எங்களை கைது செய்து தண்டித்திருக்க முடியும்...

திருவாரூர் மாவட்ட தோழர்கள் குறைவாக அந்நேரத்தில் கலந்துக்கொண்டிருந்தாலும், அப்போராட்டத்தினை வெற்றிகரமாக்கினர்.... தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் என்ற ஆலமரம் எங்களை பாதுகாத்தது..அதன் முன்னோடிகளே மேலிருந்து எங்களை ஆசிர்வதித்து வழிநடத்தினார்கள் என்பதை நாங்கள் தலை வணங்கி ஏற்றுக்கொள்கிறோம். இப்போராட்டத்தின் பலனாக அருகாமை மாவட்டங்களில் கஜா புயல் நிவாரண பணியில் இருந்த நமது தோழர்களது உயிர் இழப்பினையும் தடுத்து பாதுகாத்தது என்பதை கேட்டு இவ்வெற்றியே நம் சங்கத்தின் வலிமைக்கு சான்று என்று பறைசாற்றுகிறோம்.

- **வெ.சோமசுந்தரம்**, மாநில பொருளாளர்

Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.



கரூர் மாவட்டத்தில் 01.07.2023ல் நடைபெற்ற பயிலரங்கில் கலந்துகொண்ட முன்னாள் மாநில நிர்வாகிகள் தோழர்கள் த.டியூக் பொன்னுராஜ், கே.ராஜ்குமார் மற்றும் நிசார் அகமது ஆகியோருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.




TNROA மாவட்ட நிர்வாகிகளுக்கான மண்டல பயிலரங்கம் 16.7.2023 அன்று கடலூரில் நடைபெற்றது. இதில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்




தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகளுக்கான மண்டல பயிலரங்கம் 15.07.2023 அன்று திருவள்ளூர் TNROA சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. இதில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர் & திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த நிர்வாகிகள் பங்கேற்றனர்



TNROA மாவட்ட நிர்வாகிகளுக்கான 3-ம் கட்ட மண்டல பயிலரங்கம் 29.07.2023 அன்று கோவை மாநகரில் நடைபெற்றது. இதில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL"
July 2023
Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில மையத்தின் சார்பாக வருவாய்த்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.குமார்ஜயந்த் இ.ஆ.ப., அவர்களை 28.07.2023 அன்று சந்தித்து துணை ஆட்சியர் பதவி உயர்வுக்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருவதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டு, பதவி இறக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கான தீர்வினை தாமதமின்றி வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

Publishing Date 3rd Week of Every Month
Registered New Paper
POSTED AT EGMORE RMS/1 PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TN/PMG (CCR) / WPP. 3 / 2015-2017

பெறுநர் :
திரு / திருமதி



If undelivered Please Return to :
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
ப.எண். 38/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005



Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.